# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**தே.செ.வெ.எண். 93** **நாள்: 14.04.2026**

**சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தல் பணியில் ஈடுபடும் நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் இன்று நடைபெற்றது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026க்கான வாக்குப்பதிவு வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் 15.03.2026 அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தேர்தல் பணியில் ஈடுபடவிருக்கும் அலுவலர்களுக்கு பல்வேறு விதமான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அதிலும் குறிப்பாக, இன்று (14.04.2026) காலை மற்றும் மதியம் இரு வேளையாக, நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இப்பயிற்சியானது, காலை 507 நபர்களும் மதியம் 486 நபர்களும் என மொத்தம் 993 நுண்பார்வையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், இப்பயிற்சியில் நுண்பார்வையாளர்கள் தேர்தல் நாள் அன்றும், அதற்கு முன் நாளிலும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது. நுண்பார்வையாளர்கள், தேர்தல் நாள் அன்று காலை 5.30 மணிக்கு வாக்குச்சாவடியில் வருகை புரிய வேண்டும். மாதிரி வாக்குப்பதிவு நடத்தும் போது கண்காணிக்க வேண்டும். தேர்தல் நாள் அன்று வாக்குச்சாவடியில் நடக்கும் அனைத்து பணிகளும் கண்காணிக்க வேண்டும். வாக்குச்சாவடி அலுவலர் மாதிரி வாக்குப்பதிவு தொடங்கி முடிக்கும் பணியினையும், பின் வாக்குப்பதிவு ஆரம்பித்தும் முடிக்கும் பொழுதும் சான்றிதழ்கள் அளிப்பதை கண்காணிக்க வேண்டும்.

ஒவ்வொரு 2 மணி நேரத்திலும் நடைபெறும் வாக்குப்பதிவு எண்ணிக்கையினை (PRO Module) செயலியிலும், 17C மற்றும் வாக்குச்சாவடி அலுவலர் கையேட்டிலும் பதிந்துள்ளரா? என கண்காணிக்க வேண்டும். வாக்குச்சாவடி நடக்கும் நிகழ்வுகள் குறித்து பொதுப்பார்வையாளருக்கு தகவல் அளிக்க வேண்டும். தேர்தல் நாள் அன்று நுண்பார்வையாளர் இணைப்பு படிவத்தினை பூர்த்தி செய்ய வேண்டும். உள்ளிட்ட பல்வேறு தேர்தல் தொடர்பான விதிமுறைகளை காணொளி மூலமாக ஒளி பரப்பப்பட்டு, நுண்பார்வையாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

இப்பயிற்சி வகுப்பில் தேர்தல் பொதுப்பார்வையாளர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்களான இணை ஆணையர் (கல்வி), மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**